பிறகுதான் அந்தமாதிரி நியமனங்கள் செய்யவேண்டும். பெரிய கோவில்களுக்கு பி. எல். பட்டதாரிகளாக இருந்தால் உதவிகரமாக இருக்கும் என்று அரசாங்கம் கருதுகிறார்கள்.

Sri K. VINAYAKAM : Sir, since recruitment to these offices is made by the departmental heads and not by the Public Service Commission, who can be trusted for their honesty in recruitment, is it a fact that the departmental heads are putting spokes in the way of appointing candidates from backward communities and scheduled castes even though they are deserving?

The Hon. Sri B. PARAMESWARAN : Selection for Gazetted appointments is made by the Public Service Commission. But other appointments like those of executive officers are being made by the Commissioner himself. I do not think there has been any case of overlooking of the seniority or the claims of any particular section of the population.

Sri M. KALYANASUNDARAM : சர்க்கார் இலாகாவிலே குமாஸ்தாக்கள்கூட சர்வீஸ் கமிஷன மூலம் நியமிக்கப்படுகிறார்கள். அப்படியிருக்கும்போது ஆலய நிர்வாக உத்தியோகஸ்தர்களையும் ஏன் சர்வீஸ் கமிஷன் மூலம் நியமிக்கக்கூடாது ?

The Hon. Sri B. PARAMESWARAN : இவர்களுக்கு பென்ஷன் கொடுப்பதற்கு யோசித்துக்கொண்டிருக்கிறோம். அப்படியிருந்தால் இவர்கள் ஸ்தானங்களை காயமாக்குவதற்கு அவசியம் ஏற்படும். அப்பொழுது சர்வீஸ் கமிஷன் மூலம் இவர்களை நியமிப்பது பற்றி அரசாங்கம் யோசனை செய்யும்.

Purchase of stationery articles for village panchayats

* 362 *Q.*—Sri V. BALAKRISHNAN : Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(*a*) whether the stationery articles for the village panchayats are to be bought compulsorily from Hoe & Co., in Madras; and

(*b*) if so, the reasons for such compulsion?

The Hon. Sri S. S. RAMASWAMY PADAYATCHI : (*a*) & (*b*) Panchayats are required to purchase standardized forms from a central press, namely, Hoe & Co., at present selected by Government and not stationery articles.

Sri V. BALAKRISHNAN : ஸ்டேஷனரி சாமான்களாக இருந்தாலும் சரி, அல்லது வேறு பாரங்களாக இருந்தாலும் சரி ஸ்தல ஸ்தாபனங்களை கட்டுப்படுத்தி ஏன் அவைகள் ஒரு குறிப்பிட்ட அச்சகத்திலிருந்துதான் அவைகளை வாங்கவேண்டும் என்று அரசாங்கம் நிர்ப்பந்திக்கவேண்டும் ? இப்படி நிர்ப்பந்தம் செய்வதால் அநேக ஸ்தல ஸ்தாபனங்கள் பாரங்கள் இல்லாததால் வேலைகளை தாமதமில்லாமல் துரிதமாகச் செய்யமுடியவில்லை, ரொம்பவும் ‘டிலே’ ஆகிறது என்பது மந்திரி அவர்களுக்குத் தெரியுமா ?

The Hon. Sri S. S. RAMASWAMY PADAYATCHI : ஸ்தல ஸ்தாபனங்கள் ஒன்றும் நிர்பந்தம் செய்யப்படவில்லை, ஹோ அண்டு கம்பெனிக்கு அரசாங்கம் இது விஷயமாக காண்டிராக்ட் கொடுத்திருக்கிறது. அவர்கள் குறைந்த ரேட்டுக்கு பாரங்கள் சப்ளை செய்வதாக

18th December 1956]

டெண்டர் போட்டார்கள். அதனால்தான் அவர்களிடமிருந்து ஸ்தல ஸ்தாபனங்கள் பாரங்கள் முதலியவைகளை வாங்கவேண்டுமென்று உத்தர விடப்பட்டிருக்கிறது. நிர்பந்தம் ஒன்றுமில்லை,

Sri M. PALANIYANDI : பஞ்சாயத்துகளுக்கு வேண்டிய பாரங்கள் துரிதமாக வழங்கப்படாததால் பல ஊழல்கள் நடக்கின்றன. ஆகையால் ஹோ அண்டு கம்பெனியில் காண்டிராக்டை அரசாங்கம் ரத்து செய்துவிட்டு, அது பல அச்சகங்ளில் இந்த வேலையைக் கொடுத்து பஞ்சாயத்துகளுக்கு துரிதமாக பாரம் முதலியவைகள் கிடைப்பதற்கு நடவடிக்கை எடுப்பார்களா ?

The Hon. Sri S. S. RAMASWAMY PADAYATCHI : அரசாங்க அச்சகத்தில் இந்த பாரங்களை அடிப்பதற்கு அரசாங்கம் திட்டமிட்டிருக்கிறது. ஆனால் இங்கு போதுமான வசதியும், இடமும் இல்லை. அதை ஏற்படுத்துவதற்கு வேண்டிய முயற்சிகள் செய்துகொண்டு வருகிறோம்.

Sri R. KRISHNASWAMY NAIDU : ஒவ்வொரு ஜில்லா பஞ்சாயத்து மகாநாட்டிலும் தாலூகா பஞ்சாயத்து மகாநாட்டிலும் பாரங்கள், புஸ்தகங்கள் முதலியவைகள் கிடைப்பதில் மிகவும் கஷ்டங்கள் ஏற்படுகின்றன என்று அமைச்சர்கள், முன்னாள் அமைச்சர்கள் முதலிய அனுபவம் உள்ளவர்களின் முன்னிலையில் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன. ஆதலால், ஜில்லாவில் ஏதேனும் ஒரு அச்சகத்துக்கு இந்தப் பொறுப்பைக் கொடுத்து காலாகாலத்தில் பாரம் முதலியவைகள் ஸ்தல ஸ்தாபனங்களுக்கு கிடைக்கும்படி செய்ய அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்பிகிறேன்.

The Hon. S. S. RAMASWAMY PADAYATCHI : இது ஜில்லாவின் பிரச்னை அல்ல. இது மாகாணம் பூராவும் செய்யப்படவேண்டிய வேலை. அரசாங்கம் இதுபற்றி பரிசிலனை செய்துகொண்டிருக்கிறது. அரசாங்கத்தின் அச்சகத்திலேயே இந்த வேலையை மேற்கொள்ள அரசாங்கம் முயற்சி செய்துகொண்டிருக்கிறது.

Sri K. RAJARAM : ஹோ அண்டு கம்பெனியின் காண்டிராக்டை உடனே ரத்து செய்வதற்கு அரசாங்கம் நோடீஸ் கொடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

The Hon. Sri S. S, RAMASWAMY PADAYATCHI: அரசாங்கத்தின் பிரஸ் நிலைமையைத் தெரிந்துகொண்டுதான் காண்டிராக்டை ரத்து நோடீஸ் கொடுக்கமுடியும்.

Sri A. RATNAM : ஹோ அண்டு கம்பெனிக்கு நம்முடைய ராஜ்யத்திலே எத்தனை கிளை ஸ்தாபனங்கள் இருக்கின்றன ? எத்தனை பேர்கள் வேலை செய்துகொண்டிருக்கிறார்கள். பஞ்சாயத்துக்கு வேண்டிய பாரம் முதலியவைகள் அச்சிடுவதில் தாமதம் ஏற்படுவதால் தோழர் ராஜாராம் கூறியது போல், காண்டிராக்டை ரத்து செய்வதற்கு அரசாங்கம் ஆலோசிக்குமா ?

The Hon. Sri S. S. RAMASWAMY PADAYATCHI : காண்டிராக்டை உடனடியாக ரத்து செய்யமுடியாது. யோசனை செய்துதான் நடவடிக்கை எடுக்கவேண்டும். ஹோ அண்டு கம்பெனிக்கு எவ்வளவு கிளைகள் இருக்கின்றன, அங்கே எவ்வளவு பேர்கள் வேலை செய்கிறார்கள் என்பதுபற்றி தகவல் தெரியாது. தெரிவதற்கு வேண்டிய அவசியமுமில்லை.

Sri K. VINAYAKAM : Sir, after all it is the use of the standardized form that is wanted. The Government should not insist upon the panchayats the use of standardized forms printed and supplied by a particular press. Will the Government allow the different panchayats to have the standardized form printed at their own places and not insist on their using the standardized forms printed and supplied by Hoe & Company?

[18th December 1956

THE HON. SRI S. S. RAMASWAMY PADAYATCHI : This is possible in some districts. But it is not economical for every panchayat to print the forms at its own place.

SRI V. BALAKRISHNAN : புதுக்கோட்டையில் இருக்கும் சர்க்கார் அச்சகம் போதிய வேலை இல்லாமல் மூடப்படக்கூடிய நிலைமையில் இருக்கிறது. இந்த அச்சகத்தினிடம் இந்த வேலையை ஒப்படைத்து ஹோர அண்டு கம்பெனியின் ஒப்பந்தத்தை உடனடியாக ரத்து செய்ய மந்திரி அவர்கள் முன் வருவார்களா ?

THE HON. SRI S. S. RAMASWAMY PADAYATCHI : இது விஷயம் கவனிக்கப்படும்,

*SRI A. GOVINDASAMY NAYAGAR : பல பஞ்சாயத்துகளில் பாரங்களும், புஸ்தகங்களும் இல்லாமல் நடைமுறையில் மிகவும் கஷ்டங்கள் எற்படுகின்றன. ஆகையால் இவைகளை ஜில்லா பஞ்சாயத்து ஆபீசர்கள், டெப்யூடி பஞ்சாயத்து ஆபீசர்கள் மூலமாக வழங்குவதற்கு அரசாங்கம் யோசிக்குமா ?

THE HON. SRI S. S. RAMASWAMY PADAYATCHI : குறிப்பாக எந்த பஞ்சாயத்திலாவது இம்மாதிரி கால தாமதம் ஏற்பட்டிருப்பதை தெரியப்படுத்தினால் அதுபற்றி விசாரித்து ஆவன செய்யலாம்.

SRI P. RAMAMURTHI : ஹோர அண்டு கோவில் அச்சிடுவது மலிவாக இருக்குமென்று கனம் மந்திரி அவர்கள் சொன்னார்கள். ஸ்தலத்தில் இருக்கும் அச்சாலைகளில் அச்சடிப்பதைவிட ஹோர அண்டு கம்பெனியில். அச்சடிப்பது மலிவாக இருக்குமென்று பஞ்சாயத்து சபைகள் தீர்மானித்தனவா டெண்டர் வரவழைத்து அந்த முடிவுக்கு வந்தார்களா ? இதனால் காலதாமதம் ஆவது எப்படி தவிர்க்கப்படும் என்றும் முடிவு செய்தார்கள் ?

THE HON. S. S. RAMASWAMY PADAYATCHI: இந்த பாரம் அச்சடிப்பதற்கு டெண்டர் விளம்பரம் செய்கிறார்கள். யாருடைய கொடேஷன் குறைவாக இருக்கிறதோ அவர்களுக்கே அச்சடிக்க காண்டிராக்ட் கொடுக்கப்படுகிறது. அதைத் தவிர வேறு விசேஷ காரணம் எதுவும் இதில் இருப்பதாகத் தெரியவில்லை.

SRI P.B. K. RAJA CHIDAMBARAM: டெண்டர் வரவழைத்ததில் ஹோர அண்டு கம்பெனியின் ரேட்டுகள் குறைவாக இருந்தது என்பதற்காகத்தான் அவர்களுக்கு காண்டிராக்ட் கொடுக்கப்பட்டது என்று கனம் மந்திரி அவர்கள் சொல்வார்களா ?

THE HON. SRI S. S. RAMASWAMY PADAYATCHI : That is the information available with me.

SRI M. KALYANASUNDARAM : ராஜ்யம் பூராவும் இருக்கக் கூடிய பஞ்சாயத்துகள் அத்தனைக்கும் தேவைப்படும் பாரங்களை அச்சடிக்க காண்டிராக்ட் எடுத்துக் கொண்டு, ஒப்பந்தத்தை நிறைவேற்றாமல் இருக்க ஹோர அண்டு கம்பெனியைத் தவிர வேறு யாராலும் முடியாது. ஒவ்வொரு ஜில்லாவிலுமுள்ள அச்சகங்களிலிருந்து டெண்டர் வரவழைத்து அந்தஅந்த ஜில்லாக்களிலுள்ள பஞ்சாயத்துக்களுக்குத் தேவையான பாரங்களை அந்த அந்த ஜில்லா அச்சகங்களிலேயே பிரிண்ட் செய்யக் கொடுப்பதனால் காலதாமதம் இன்றி பாரங்கள் வினியோகிக்கப்படும். மேலும் அந்த அந்த ஜில்லாவிலுள்ள அச்சகங்களுக்கும் உதவி செய்ததாக ஆகும். இந்த யோசனையை சர்க்கார் யோசிக்க முடியுமா என்று கேட்கிறேன்.

THE HON. SRI S. S. RAMASWAMY PADAYATCHI : இவ்விஷயமாகத்தான் அரசாங்க அச்சகத்தையே விரிவுபடுத்தும் யோசனை இருந்து கொண்டிருக்கிறது. அது முடிந்த உடனே எல்லா வேலையும் துரிதமாக நடைபெறும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

18th December 1956]

Sri P. B. K. RAJA CHIDAMBARAM : இதை பரீக்ஷார்த்தமாக ஜில்லாக்களிலுள்ள அச்சகங்களிலேயே கொடுத்துப் பார்க்கலாம் என்று எண்ணிக் கொண்டிருந்த யோசனை என்ன ஆயிற்று ?

The Hon. Sri S. S. RAMASWAMY PADAYATCHI : சர்க்கார் அச்சகத்திலேயே இவற்றை அச்சிடுவது எனத் தீர்மானிக்கப்பட்டுவிட்டதால் பரீட்சார்த்தமாக ஜில்லாக்களிலுள்ள அச்சகங்களிலே கொடுக்கும் யோசனை பரிசீலிக்கப்படவில்லை.

Sri S. PANCHAKSHARAM : Sir, from my own experience I have found that printing in co-operative printing works is much cheaper than printing elsewhere. We have got co-operative printing presses in Madras—in Chintadripet—in North Arcot, Salem, and in some other districts. Why not these forms and other things be printed in such co-operative printing works instead of handing them over to Hoe & Co. and others?

The Hon. Sri S. S. RAMASWAMY PADAYATCHI : Yes, Sir, we shall consider the suggestion.

Sri S. C. C. ANTHONY PILLAI : The Hon. Minister has been repeatedly saying that the Government are considering the possibility of printing them in the Government Press. How long will it take the Government to implement this particular suggestion?

The Hon. Sri S. S. RAMASWAMY PADAYATCHI : Very early. That is what Government expect in the matter.

Sri S. PANCHAKSHARAM : Sir, my question has not been answered. My suggestion is that it would be cheap to print these forms in the co-operative printing works. We have got co-operative printing works in Madras, Salem, North Arcot and in some other districts. Why should not these forms be printed there at least as an experimental measure?

The Hon. Sri S. S. RAMASWAMY PADAYATCHI : I have answered it, Sir. I shall repeat the answer. We shall consider the suggestion.

TRUTH ALONE TRIUMPHS

Sri P. RANGASWAMY REDDIAR : இந்த பாரங்களை அச்சடிக்கும் காண்டிராக்ட் சென்னை ஹோா அண்டு கம்பெனிக்கே உரிமையாகக் கொடுக்கப்பட்டிருக்கிறதா ? இல்லையானால் ஜில்லாக்களிலுள்ள அச்சகங்களில் அந்த அந்த ஜில்லா பஞ்சாயத்துக்கள் அச்சடித்துக் கொள்வதற்குத் தடை என்ன?

The Hon. Sri S. S. RAMASWAMY PADAYATCHI : தடை ஒன்றும் இல்லை. ஹோா அண்டு கோ. காரர்கள்தான் அந்த பாரங்களை அடிப்பதற்கான விசேஷ மிஷின்கள் எல்லாம் வைத்திருக்கிறார்கள். அவர்கள் தான் அந்தக் காண்டிராக்டை எடுத்து நடத்துவதற்குத் தகுதி உடையவர்களாய் இருக்கிறார்களே தவிர வேறு ஒன்றும் இல்லை.

Sri A. RATNAM : அரசாங்க அச்சகத்தை விரிவு படுத்த எத்தனை காலம் பிடிக்கும் ? அதிகக் காலதாமதம் ஆகும்போல் இருந்தால் வோட்டர் லிஸ்டுகளை அச்சடிப்பது போலவே ஆங்காங்குள்ள பஞ்சாயத்துக்களே அந்த அந்தப் பிராந்தியங்களிலுள்ள அச்சகங்களிலே அச்சடித்துக் கொள்ள அனுமதி வழங்கப்படுமா ?

[18th December 1956

THE HON. SRI S. S. RAMASWAMY PADAYATCHI : விரிவு படுத்த எத்தனை காலம் ஆகும் என்பதைப் பற்றித் தனியாகக் கேள்வி கேட்டால் பதில் கொடுக்கப்படும்.

SRI A. GOVINDASWAMY NAYAGAR : ஹோ அண்டு கோ. காரர்கள் அந்த பாரங்களை அச்சடிப்பதிலும், வினியோகிப்பதிலும் ஏதோ தகராறு ஏற்பட்டிருப்பதன் காரணமாகத்தான் ஸ்ரீ வி. பாலகிருஷ்ணன் அந்தக் கேள்வியைக் கேட்டிருக்கவேண்டும். அப்படி ஏதாவது தகராறு ஏற்பட்டிருக்குமாயின் மறுபடியும் அவர்களுக்குக் காண்டிராக்ட் கொடுக்காமல் இருக்க அரசாங்கம் யோசிக்குமா ?

THE HON. SRI S. S. RAMASWAMY PADAYATCHI : முதலில் பாரம் அச்சடிப்பதற்கு வேண்டிய வசதிகளை சர்க்கார் அச்சகத்தில் செய்து கொண்டு தான் காண்டிராக்டை ரத்து செய்ய நடவடிக்கை எடுக்க முடியும்.

SRI K. VINAYAKAM : பஞ்சாயத்துகளுக்கு வேண்டியது ஸ்டாண்டர்ட் பாரம் தான். அதை ஹோ அண்டு கோ. கம்பெனியில் இருந்து தான் வாங்கிக் கொள்ளவேண்டுமென்று எதற்காக நிர்ப்பந்தப்படுத்த வேண்டும். எந்த அச்சகத்தில் அச்சடித்துக் கொண்டாலும், அல்லது கையில் எழுதிக் கொண்டாலும் அந்த ஸ்டாண்டர்ட் பாரத்தில் தான் நடவடிக்கைகள் இருக்க வேண்டுமென்று பொதுவாக சர்க்கார் முடிவு செய்தால் என்ன ?

THE HON. SRI S. S. RAMASWAMY PADAYATCHI : அந்த பாரம் எப்படி இருக்கவேண்டும், நீளம், அகலம், கலர் போன்றவைகள் எல்லாம் ஹோ அண்டு கோ. காரர்களுக்குத்தான் தெரியும். இந்த பாரங்களைத் தனித் தனியாக பல அச்சகங்களில் அச்சடிப்பதைக்காட்டிலும் மாகாணம் பூராவுக்குமாக ஒரே இடத்தில் அச்சடித்தால் செலவு குறையும் என்று கருதித்தான் இப்படிச் செய்கிறது. வேறு ஒன்றும் இல்லை.

SRI M. R. RAMACHANDRAN : May I know, Sir, wh?ther Messrs. Hoe & Co. own the only competent press to print thes› forms ?

THE HON. SRI S. S. RAMASWAMY PADAYATCHI : They are the only tenderers. No competence or anything else is necessary.

Arrest of one V. N. Shanmugha Nadar and his wife at Madras

* 363 *Q.*—SRI P. RANGASWAMI REDDIAR : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) whether it is a fact that one V. N. Shanmugha Nadar and his wife were arrested at Madras for the alleged offence of counterfeiting currency notes of the denomination of Rs. 100 about eight months back; and

(*b*) if so, whether any prosecution was launched against them and if so, the result thereof?

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*) Yes, Sir.

(*b*) The charge sheet against Shanmugha Nadar and others has not yet been laid as certain relevant documents connected with the case have not yet become available and in the meanwhile they have been released on bail.